விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 322 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 20 வியாழக்கிழமை (06.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டோடு தமிழ்த் தேசியக் கூட்டணி இணங்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படலாம்

### எம்.ஏ.சுமந்திரன்



(வவுனியா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் அதற்கு இணங்கி வந்தால் மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும் என தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன்

04ஆம் பக்கம் பார்க்க

## 3 மாதக் குழந்தை சுன்னாகத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பால் குடித்துவிட்டு உறங்கிய 3 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த சஜீவன் காயத்திரி என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## தெதுரு ஓயாவில் நீராடச் சென்ற

### 5 இளைஞர்கள் உயிரிழப்பு

(சிலாபம்)

சிலாபம் - தெதுரு ஓயாவிற்கு நீராடச் சென்ற 5 இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

16 மற்றும் 18 வயது

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய


# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அவசியம்

### புதுடில்லியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(புதுடில்லி)

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



## அநுர அரசின் பட்ஜெட் நாளை

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் நாளை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி

15ஆம் பக்கம் பார்க்க

## அரச நிதி தவறாகப் பயன்பாடு

# பசிலுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்த ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பசில் ராஜபக்ஷ, 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 1.03 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக

15ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவிலில் இளைஞனை கட்டிவைத்து சித்திரவதை

### பிரதான சந்தேக நபர் 11 மாதங்களின் பின் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளைஞன் ஒருவனை, தாயின் கண்முன், சித்திரவதைக்கு உள்ளாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் 11 மாதங்களின் பின்னர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் மருத்

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் மனைவியை வெட்டிக் கொன்ற கணவன்

### ஏறாவூர் பொலிஸில் குழந்தையுடன் சரண்

(வவுனியா)

வவுனியா பூம்புகாரில் தனது மனைவியை வெட்டிப் படுகொலை செய்த கணவன் ஏறாவூர் பொலிஸில் நேற்று தனது 2 வயதுக் குழந்தையுடன் சரணடைந்துள்ளார்.

வவுனியா பூம்புகார் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் வெட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் சடலமாக

15ஆம் பக்கம் பார்க்க

## ஹெரோயினுடன் கலட்டியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் ஹெரோயினுடன் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேக நபரே நேற்று முன்தினம்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற

## பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று கந்தர்மடம்பகுதியில்வைத்து கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் 26.10.2025 அன்று நடாத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

**1 ம் பரிசு - 3725**
**2 ம் பரிசு - 2079**
**3 ம் பரிசு - 5996**

**ஆறுதல் பரிசுகள்**

**4327, 1504, 4363, 825, 4326, 5857, 083**

குறித்த பரிசுப் பொருட்களை நாளை 07.11.2025 வெள்ளிக்கிழமைகாலை 10.00 மணிமுதல் 11.00 மணிவரையான நேரப் பகுதிக்குள் தந்தை செல்வா கலையரங்க முன் பகுதிக்குள் உரிய நேரத்துக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சமாசத்தின் நிகழ்வுகள் அனைத்துக்கும் உரிய ஏற்பாடுகளை செய்து சிறப்புற நடாத்த உதவிய தந்தை செல்வா கலையரங்க நிர்வாகத்தினருக்கும் மற்றும் இதர அனுசரணை யாளர்களுக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

(5835)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியை
**திருமதி சிவதர்சினி சிவரூபன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா ஜீவரத்தினம்**

அவர்கள் 04.11.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

(C-4266)

## மரண அறிவித்தல்

மலர்வு 05 - 10 - 1937



உதிர்வு 05 - 11 - 2025

**திரு. சின்னத்துரை இரத்தினசிங்கம்**
**(ஓய்வுபெற்ற ஆசிரியர் – யா/ அருணோதயக் கல்லூரி)**

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அரசொல்லை அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று 05.11.2025 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - கண்மணி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற கதிரித்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் இளைய மருமகனும் காலஞ்சென்ற பத்மராணி மற்றும் தெய்வநாயகி ஆகியோரின் அன்புக் கணவரும் சர்வேஸ்வரா(விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), லாவண்யா(உபவிடுதிக்காப்பாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகி யோரின் அன்புத் தந்தையும் திலீபன்(அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி. தென்மேற்கு பிரதேச சபை), சிவநயனி(காணி மற்றும் மாவட்ட பதிவகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் லீலாவதி, நடராசா (குலசிங்கம் ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்), சிவயோகம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்றவர்களான முருகையா, சின்னராசா, சிவக்கொழுந்து, தில்லையம்பலம், வேலும்மயிலும், துரைராசா, வீரசிங்கம் மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் குஹப்பிரணவி, கஜசங்கவி, ஹர்ணிகா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 06.11.2025 வியாழக்கிழமை அளவெட்டி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரசொல்லை,
அளவெட்டி வடக்கு.

(C-4264)

தகவல்: குடும்பத்தினர்

## யாழில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

சுன்னாகம், ஊரெழு மேற்குப் பகுதியில் 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை
விரிவுரையாளர் **இ.சர்வேஸ்வரா** அவர்களின்
அன்புத் தந்தை

**சின்னத்துரை இரத்தினசிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி )**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 05.10.1937 இறப்பு 05.11.2025

(C-4263)

*பிரிவால் துயருற்றிருக்கும் :* ஆசிரிய மாணவர்கள், கல்வியியல் முதுமாணி கற்கைநெறி, அணி - XV, உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 10.10.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**குலநாயகம் மோகன்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 07.11.2025 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் எதிர்வரும் 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் இல.199, சுண்டுக்குளி - கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணத்திலுள்ள விஜய் மண்டபத்தில் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை இழந்து நாம் தவித்து நின்ற வேளை எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5832)

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல.61, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

இவ் வண்ணம்
குடும்பத்தினர்
077 516 0888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வட்டியில்லா கடன் திட்டம் ஆரம்பம்

**(கொழும்பு)..........................**
**2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் 10 ஆவது தொகுதி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு தற்போது கோரியுள்ளது.**

தகுதியுள்ள மாணவர்கள் நவம்பர் முதலாம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை www.studentloans.mohe.gov.lk என்ற இணையதளம் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லாத உயர் கல்வி நிறுவனங்களில் முற்றிலும் ஆங்கில வழியில் வழங்கப்படும் பட்டப் படிப்புகளைத் தொடர இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும், அத்துடன் நவம்பர் முதலாம் திகதியன்று, 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூபா 15 இலட்சம் ரூபாய் (கற்கைநெறிக் கட்டணங்களுக்காக) கடனாக வழங்கப்படும்.

மேலும் வாழ்க்கைச் செலவுகளுக்காக ஆண்டுக்கு தலா 75,000 ரூபாய் உதவித் தொகையும் வழங்கப்படும்.

இந்தக் கடன் வட்டியில்லாமல் வழங்கப்படும், மேலும் பட்டப்படிப்பு முடிந்த பிறகு ஒரு வருட சலுகை காலத்துடன் சேர்த்து, 12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம்.

மாணவர்கள் தொடர்ந்து தகுதி பெற, 80% வருகை வீதம் மற்றும் கட்டாயப் பாடங்களில் குறைந்தபட்சம் திறமை (C) சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

இலங்கையின் பல முன்னணி தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் இந்தச் சேர்க்கையில் பங்கேற்கின்றன.

மேலதிக தகவல்களுக்கு, உயர்கல்வி அமைச்சின் இணையதளத்தில் பார்வையிடுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

# விசேட சோதனை பலர் கைது

(கொழும்பு)
நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட நடவடிக்கையின் கீழ், பல்வேறு குற்றச் சம்பவங்களில் நேரடியாக தொடர்புடைய 16 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நடவடிக்கையின் போது 32,201 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக 736 நபர்களும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 271 பேரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மதுபோதையில் மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியதற்காக 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(நி)

# போதைக்கு அடிமையாகும் பெண்கள் அதிகரிப்பு

## அமைச்சர் சரோஜா சாவித்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)
கொழும்பு மற்றும் அதனை அண்மித்த நகரங்களில் போதைக்கு அடிமையாகும் பெண்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருவது குறித்து சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு பாரிய கவலையை வெளியிட்டுள்ளது.

அண்மைய தகவல்களின் அடிப்படையில், அதிக எண்ணிக்கையிலான இளம் பெண்களும் யுவதிகளும் பல்வேறு போதைப் பொருட்களுக்குப் பயங்கரமான விகிதத்தில் அடிமையாவதைக் காட்டுவதாக அமைச்சர் சரோஜா சாவித்திரி பவுல்ராஜ் தெரிவித்தார்.

பொலிஸ், போதைப் பொருள் தடுப்பு பிரிவுகள் மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் தரவுகளின்படி, பெண்களிடையே "ஐஸ்" (மெத்தம்பேட்டமைன்), மாத்திரைகள், மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் போதைக்கு அடிமையாதல், அவர்களின் குழந்தைகளின் அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சிக்கு ஒரு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும் அமைச்சர் எச்சரித்தார்.

இந்த பிரச்சினையை எதிர்கொள்வதற்கும், தேவையான ஆதரவு மற்றும் மறு வாழ்வு நடவடிக்கைகளை வழங்குவதற்கும் அமைச்சு ஏற்கனவே ஒரு விசேட வேலைத் திட்டத்தை உருவாக்கத் தொடங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மக்களைச் சந்தித்தார்

## பிரதியமைச்சர் நாமல் கருணாரட்ன



(நெளுக்குளம்)
முல்லைத்தீவு - உடையார்கட்டு வடக்கு மைதானத்திற்கு விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் துறைக்கான பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வருகை தந்து மக்கள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது உடையார்கட்டு மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் இச் சந்திப்பில் பங்கேற்று தங்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து அமைச்சரிடம் முன்வைத்தனர்.

மக்களின் கோரிக்கைகளை செவிமடுத்த அமைச்சர் அவற்றுக்குத் தீர்வு காண உறுதியளித்ததுடன், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ச்சியை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன், தேசிய மக்கள் சக்தியின் முல் லைத்தீவு மாவட்ட அமைப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்களான காயத்திரி தேவி, தமிழ்வாணி ஆகியோர் கலந்து கொண்டனர். (8-299)

# பேரணியில் பங்கேற்க மாட்டோம்

## மனோ கணேசன் திட்டவட்டம்



(கொழும்பு)
நவம்பர் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சி பேரணியில் தனது கட்சி பங்கேற்காது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய மனோ கணேசன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடனான பிரச்சினைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்ற கருத்துக்களை மறுத்த மனோ கணேசன், எந்த அரசியல்வாதிகளுடனும் எந்தப் பிரச்சினையும் இல்லை எனத் தெரிவித்தார். (நி)

# உலக உணவுத் திட்ட பிரதிநிதி -நளிந்த சந்திப்பு



(கொழும்பு)
உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதியும் மற்றும் இயக்குநருமான பிலிப் வார்டு மற்றும் அரசாங்க நட்புறவு அதிகாரி முஸ்தபா நிஹ்மத் ஆகியோர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸவை சந்தித்து கலந்துரையாடினர்.

2023-2027 ஆம் ஆண்டிற்கான உலக உணவுத் திட்டத்தின் பிரதான திட்டம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பிற்கான அரசாங்கத்தின் எதிர்கால வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண விதி மீறல்;
## 4 வீரர்களுக்கெதிராக நடவடிக்கை
### ஐ.சி.சி அறிவிப்பு

அண்மையில் நடைபெற்ற ஆடவருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது நடந்த ஒழுங்கு விதி முறை மீறல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சர்வதேச கிரிக்கெட் பேரவை உறுதி செய்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 14, 21 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆடவர் அணிகள் மோதிய போட்டிகளில் நட ந்த சம்பவங்களை எமிரேட்ஸ் ஐசிசி எலைட் நடுவர் குழாம் விசாரித்தது.

அதன்படி, செப்ரெம்பர் 14 ஆம் திகதி நடந்த இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியில், இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் மற்றும் பாகிஸ்தான் வீரர் ஹாரிஸ் ரவுப் இருவரும் விளையாட்டின் ஐசிசி நடத்தை விதிகளின் உறுப்புரை 2.21-ஐ மீறியமைக்காக (விளையாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நடத்தை) தங்கள் போட்டி ஊதியத்தில் 30% அபராதம் விதிக்கப்பட்டு, தலா இரண்டு தகுதி யிழப்பு புள்ளிகளையும் பெற்றனர்.

அதேசமயம், பாகிஸ்தான் வீரர் சாகிப்சாதா பர்ஹானுக்கு அதே குற்றத்துக்காக அதிகாரப்பூர்வ எச்சரிக்கையும், ஒரு தகுதியிழப்பு புள்ளியும் வழங்கப்பட்டது.

அத்துடன், செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடந்த போட்டியின் போது, அருவருப்பான சைகை பயன்படுத்தியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து இந்திய வீரர் அர்ஷ்தீப் சிங் குற்றமற்றவர் என்று கண்டறியப்பட்டதால், அவருக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

அதேநேரம், செப்ரெம்பர் 28 ஆம் திகதி அன்று நடைபெற்ற ,றுதிப் போட்டியில், இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2.21 ஆவது உறுப்புரையை மீறிய குற் றத்தை ஏற்றுக் கொண்டதால், ஒரு தகுதி யிழப்பு புள்ளியுடன் அதிகாரபூர்வ எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதே போட்டியில், பாகிஸ்தான் வீரர் ஹாரிஸ் ரவுப் மீண்டும் 2.21 ஆவது உறுப்புரையை மீறியதற் காக போட்டி ஊதியத்தில் 30% அபராதம் மற்றும் கூடுதலாக இரண்டு தகுதி யிழப்பு புள்ளிகளைப் பெற்றார்.

இதன் விளைவாக, ஹாரிஸ் ரவுப் 24 மாத காலப்பகுதியில் மொத்தம் நான்கு தகுதியிழப்பு புள்ளிகளை பெற்றதால், சர்வதேச கிரிக்கெட் பேரவை ஒழுங்கு விதிகளின்படி, தற்போது நடைபெறும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக பாகிஸ்தான் விளையாடும் இரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாட அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (3)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில்
## சம்பியனானது யாழ்.மாவட்ட இளையோர் அணி



தேசிய மட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் மாவட்ட இளையோர் அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப் படுத்தி எதிரணிகளைத் திணற வைத்து 8 ஆவது முறையாகவும் சம் பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளது.

மாவட்ட இளையோர் அணிகளுக்கு இடையிலான 35 ஆவது தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் குருநாகல் பாலிகதேவா கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டி யில் யாழ்.மாவட்ட இளையோர் அணி காலிறுதியாட்டத்தில் குருநாகல் இளைஞர் அணியை எதிர்கொண்டு 16:06 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத் திற்குத் தகுதிபெற்றது.

அரையிறுதி ஆட்டத்திலும் கொழும்பு நகர்ப்புற இளையோர் அணியை எதிர்கொண்டு 36:18 என்ற அபாரமான புள்ளிகளைப் பெற்று இறுதியாட்டத் தில் காலி இளையோர் அணியை எதிர்த்து மோதினர். இதிலும் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 60:16 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் அபாரவெற்றி பெற்று 8 ஆவது முறையாகவும் சம்பியன் கிண் ணத்தைச் சுவீகரித்துச் சாதனை படைத்துள்ளனர். (3-90)

## தமிழரசுக்...

தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியினுடைய மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் காலை பத்து மணியிலிருந்து மாலை வரை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலே விசேடமாக வரப்போகிற வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு கலந்துரையாடலை மேற் கொண்டுள்ளோம்.

7ஆம் திகதி ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற வகையில் தன்னுடைய வரவு செலவுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கிறார். அதற்குப் பிறகு இரண்டாம் வாசிப்பு விவாதம் நடைபெற்று 14 ஆம் திகதி அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். அதற்குப் பிறகு குழுக்கள் மட்டத்தில் விவாதம் நடைபெறும். அதைத் தொடர்ந்து மூன்றாம் வாசிப்பு இடம்பெற்று அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். இந்த விடயத்தை நாங்கள் மிகவும் தீவிரமாக ஆராய்ந்தோம். பாராளுமன்றக் குழு ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய நிலைப்பாடுகளை அல்லது தங்களுடைய கருத்துக்களை சொன்னார்கள்.

மத்திய செயற்குழு உறுப்பினர்களும் இன்றைய சூழ்நிலையிலே நாங்கள் என்ன விதமாக இதனை அணுக வேண்டும் என்கின்ற தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள்.

இறுதி முடிவு எதுவுமே எடுக்கப்படவில்லை. நாங்கள் ஜனாதிபதி தன்னுடைய யோசனைகளை 7ஆம் திகதி முன்வைத்த பிறகு இரண்டாம் வாசிப்பு முடிவடைவதற்கு முன்னதாக எங்களுடைய அரசியல் குழுவோடு பாராளுமன்றக் குழுவும் இணைந்து வாக்களிப்பில் எப்படியாகக் கலந்து கொள்வது என்பது சம்பந்தமான இறுதி முடிவெடுப்பது எனத் தீர்மானித்திருக்கிறோம்.

அதைத் தொடர்ந்து நாங்கள் மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளோடு இணைந்து செயற்படுகின்ற விடயம் சம்பந்தமாகப் பேசப்பட்டது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு தலைவரும் நானும் ஏற்கெனவே சில சந்தர்ப்பங்களில் உரையாடியிருக்கிறோம். அது சம்பந்தமாக எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். அந்த நிலைப்பாட்டில் அவர்களும் இணங்கி வருவார்களாக இருந்தால் நாங்கள் முன்னர் இருந்ததைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினரோடு இணங்கிச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆகவே அப்படியாக இணங்கிச் செயற்பட முன்வருமாறு நாங்கள் அவர்களுக்கு அழைப்பும் விடுக்கிறோம். மத்திய செயற்குழுவிலே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோடும் நாங்கள் இது சம்பந்தமாக பேசலாமா? என்ற விடயமும் எடுத்துக் கொள்ளப்பட்டது. சகல தமிழ்த் தரப்புக்களோடும் பிரதான தலைமை தமிழ்க் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அனைவரையும் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,250)

## மீனவர்...

தற்போது இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, "இந்து - இலங்கை இருதரப்பு உறவுகள்" என்ற தலைப்பில் நடத்திய கலந் துரையாடலின் போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய நாடுகளின் கடற் சட்டம் பற்றிய சாசனம் நடைமுறையில் உள்ளது என்றும், அதற்குட்பட்டு சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மதித்து இரு தரப்பினரும் ஒன்றிணைந்து உரிய சட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகளுக்கு இணங்க பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாடுகளும் முன்னுரிமை அளிப்பது முக்கியம் என்றும் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டாலும் வருமானம் ஈட்டும் செயல்முறை சட்டபூர்வமாக இருக்க வேண்டும் என்பதை இரு அரசாங்கங்களும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச தெளிவுபடுத்தினார்.

நிரந்தரச் சட்டக் கட்டமைப்பு இல்லாமல் செயற்படுவதை விட, இரு தரப்பினரும் ஒரு நீடித்த தீர்விற்காக இணைந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், கச்சத்தீவு அருகே உள்ள இலங்கை கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் நுழைவது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ச்சியான பிரச்சினைகள் நீடிப்பதாகவும் இது பெரும்பாலும் கைதுகள் மற்றும் கடல் எல்லைகள் தொடர்பான மோதல்களுக்கு வழிவகுப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டன. (ம-7)

## பல்வேறு...

இவர் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கு தென்னை முக்கோண வலய தெங்கு விவசாயிகளுக்கு மானியம்

**(கொழும்பு) ..................................**
**வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் தெங்கு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

புதிதாக தெங்கு பயிரிடப்படும் காணிக்கு நீர் வசதிகளைப் பெறுவதற்காக இந்த மானியம் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் 1 மில்லியன் கன்றுகளை வளர்க்கும் திட்டத்துடன் இணைந்து இந்த மானியம் வழங்கப்படவுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (நி)




## புகையிலை, மதுபான பயன்பாடு
# 200 நோய்களுக்குக் காரணம்
### புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)
புகையிலை மற்றும் மதுபான பயன்பாடு சுமார் 200 நோய்களுக்குக் காரணமாக அமைகிறது என புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புகையிலை மற்றும் மதுபான பயன்பாட்டைக் குறைப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையின் போது இந்த விடயம் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

இதனிடையே, புகையிலை மற்றும் மதுபான பயன்பாடு காரணமாக நாளொன்றுக்கு 110 பேர் உயிரிழப்பதாக கூறப்படுகிறது.

அதேநேரம், புகையிலை பயன்பாடு உடனடியாக மக்களை கொல்லாது. எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்காக பாரியளவு நிதியை செலவிட வேண்டியுள்ளது.

இதன்படி, புகையிலை பயன்பாட்டால் பாதிக்கப்படுவோருக்காக சுமார் 204 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை சந்தேக நபர்கள் தப்பியோட்டம்
### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(நெளுக்குளம்)
புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த கோடா, செப்பு சுருள், பரல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்றை தினம் தேவிபுரம் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த 11 இலட்சத்து 69 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கோடா, செப்பு சுருள் , 7 பரல்கள் என்பன புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. கசிப்பு உற் பத்தி நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த சந்தேக நபர்கள் பொலிஸாரின் வருகையை அறிந்தவுடன் அங்கு இருந்து தப்பியோடியுள்ளனர்.இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-299)



# பெரும்போகத்திற்கான நீர்விநியோகம்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் போகத்திற்கு 33 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட உள்ளது.வட மாகாணத்தில் 2 ஆவது பெரிய குளமான முருகன் கட்டுக்கரை குளம் பெரிய உடைப்பு துருசு பகுதியில் மத தலைவர்கள் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் நீர்ப்பாசன பணிப்பாளர் , முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் , திணைக்கள அதிகாரிகள், வாய்க்கால் அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது கட்டுக்கரை குளத்தில் 9.2 அடி நீர் காணப்படுகிறது. மேலும் கட்டுக்கரை குளத்திற்கு நீர்வரத்து காணப்படுகின்றது.

# யாழில் நேற்று இடம்பெற்ற சுனாமி ஒத்திகை




(கரணவாய்)
உலகளாவிய ஒருங்கிணைந்த சுனாமி அனர்த்த வெளியேற்றுகை ஒத்திகை நிகழ்வு இலங்கை உட்பட 28 நாடுகளில் கரையோர மாவட்டங்களில் நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் மாத்தறை, களுத்துறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/401 பிரிவிற்குட்பட்ட பகுதியில் நடை பெற்றது.

இதன்போது ஏற்கனவே கிராமசேவை உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்கள் ஆகிய இரு பகுதியினரையும் பாதுகாப்பாக வெளியேற்றி யா /வட இந்து மகளிர் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு வெளியேற்று ஒத்திகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட அவசரகால வெளியேற்ற பாதையூடாக பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை வெளியேற்றும் செயற்பாட்டில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன் மேற் பார்வையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.



முதலுதவி செயற்பாடுகளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கியூமெடிகா, சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ், மாவட்ட மற்றும் பிரதேச அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், 119 அவசர சேவையினர் ஈடு பட்டிருந்தனர். காயப் பாதிப்புகளுக்கு உள்ளானோரை மீட்டு அவசர நோயாளர் காவு வண்டிகள் மூலம் முதலுதவி நிலையங்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பிக்கும் ஒத்திகை நடவடிக்கையும் முன்னெடு க்கப்பட்டிருந்தது.

இதன்போது யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பொறுப்பதிகாரி சூரிய குமார், பருத்தித்துறை நகர சபை தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல், உப தவிசாளர், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, பருத்தித்துறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, கடற்படை மற்றும் விமானப்படை பொறுப்பதிகாரிகள், பருத்தித்துறை பிரதேச செயல உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

பொதுமக்கள், மாணவர்கள் என சுமார் ஆயிரம் பேர்வரை இந்த ஒத்திகை நிகழ்வில் இணைக்கப்படிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் கழிவுகளை வீசிச் செல்வோரின் காணொளிகள் சமூகவலைத்தளங்களில்

(யாழ்ப்பாணம்)

**நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்குள் பொது இடங்களில் கழிவுகளை வீசிச்செல்பவர்களை எச்சரிக்கும் வகையில் அவர்களின் காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளன.**

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் கழிவுகளை வீசி செல்பவர்களை கண்டறிய பல இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அதனையும் கவனத்தில் எடுக்காது கழிவுகளை பலரும் வீசிச் செல்கின்றனர்.

அவ்வாறு கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளின் அடிப்படையில் பலர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வருகின்ற போதிலும் தொடர்ந்தும் கழிவுகளை வீசி வருகின்றனர்.

இந்நிலையில் அவ்வாறு கழிவுகளை வீசுபவர்களை எச்சரிக்கும் வகையில் கழிவுகளை வீசிச் செல்பவர்களின் காட்சிகளின் காணொளிகளின் தரத்தை மிக குறைத்து அவர்களை ஏனையோர் அடையாளம் காணாத வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளது.

அவ்வாறு கழிவுகளை வீசுபவர்கள் இனிவரும் காலங்களிலும் இவ்வாறு செயற்பட்டால் அக் காணொளிகளை ஏனையோர் அடையாளம் காணும் வகையில், மிக உயர்ந்த (4K) தரத்தில் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுகளை வீசிச் சென்றவர்களுக்கு கடந்த இரண்டு மாத காலத்தினுள் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# பரிசளிப்பு விழாவும் இதழ் வெளியீடும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சாவகச்சேரிப் பொது நூலகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா மற்றும் நகர மஞ்சரி இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு ஆகியன நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தி பா. பார்த்திபனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்வி பணிப்பாளர் -(தமிழ் துறை) ப.பரணிதரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தின் பாடசாலை மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், முன்பள்ளி மட்ட போட்டிகளில் பங்கு பற்றிய முன்பள்ளி பிள்ளைகள், வாசகர் மட்ட போட்டிகளில் வெற்றியை பெற்றுக் கொண்ட நூலக வாசகர்கள் ஆகியோருக்கான பரிசில்களும், சிறந்த நூலக அங்கத்தவர், சிறந்த சிறுவர் பகுதி நூலக அங்கத்தவர், சிறந்த பத்திரிகை துறை வாசிப்பாளர் ஆகியோருக்கான விருதுகளும் வழங்கப்பட உள்ளன.

அத்துடன் நகரமஞ்சரியின் இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வும் நடைபெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# அரசியற் தீர்வும்-பொறுப்புக் கூறலும் ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தினால் "அரசியற் தீர்வும்-பொறுப்புக் கூறலும்" ஒரு எண்ணிம ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிமுதல் 7.30 மணிவரை யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியின் முதற்தளத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பொறுப்புக் கூறலும் சுயாதீன வழக்குத் தொடுனர் தொடர்பிலான விவாதமும் எனும் சிறப்புக் கருத்துரையினை Centre for Human Rights & Developmnent நிறைவேற்றுப் பணிப்பாளர், சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் தற்போதைய சூழலில் அரசியலமைப் பாக்கச் செயன்முறையில் தமிழர் அணுகுமுறை எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# விஞ்ஞான புனை கதை எழுதுவதில் யாழ்.மாணவர்கள் சாதனை




(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான புனை கதை எழுதுவதில் தேசிய ரீதியில் யாழ் மாணவர்கள் மூன்று இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான மன்றம் உலக விஞ்ஞான தினத்தையும், விஞ்ஞானம் தொடர்பான போட்டிகளில் தேசிய ரீதியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தியது.

இதில் விஞ்ஞான புனை கதை எழுதுவதில் முதலாம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த மாணவி ரூபிகா அருந்தவமும் இரண்டாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி கேசிகா தயாகுமாரனும், மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி அட்சயா ஞானசந்திரனும் பெற்றுக்கொண்டனர்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் கலாநிதி சுசந்த் சமரவீர தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேசேன பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார். (8-33)

# பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவைகள் விற்பனை நிலையம் திறப்பு

(வவுனியா)

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவைகள் விற்பனை நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத் சந்திரவினால் திறந்து வைக்கப்பட்டது.

கமநல சேவைகள் விற்பனை நிலையமானது வவுனியா மாவட்ட விவசாயிகளின் நலனை அடிப்படையாகக் கொண்டு, குறைந்த விலையில் வவுனியா மாவட்ட மக்களிற்கு விளைபொருட்களை விற்பனை செய்யும் நோக்கிலே குறித்த நிலையமானது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கமநல சேவைகள் விற்பனை நிலையம் இலங்கையிலேயே உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் முதன் முறையாக வவுனியா மாவட்டத்திலேயே திறந்து வைக்கப்பட்டுள்ளது.



மேலும் இந்நிகழ்வில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், தேசிய இரசாயன உரச்செயலக பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம்.பி.விஜயவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள மேலதிக ஆணையாளர் ஏ.எம். விக்ரமராச்சி, மற்றும் விவசாய சம்மேளன தலைவர், முக்கியஸ்தர்கள், வர்த்தக சங்க தலைவர், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களை பதிவு செய்தல் - 2026

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு 2026ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியான ஒரு வருட காலத்திற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான அறிவித்தல், இதில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்கள் இதன் கீழ் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து பதிவுக்கட்டணத்தை **"பொருளாளர்" ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு** என்ற பெயருக்கு இலங்கை வங்கியில் வைப்பிலிட்டு வங்கிப் பற்றுச்சீட்டையும் இணைத்து 25.11.2025 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சலில் மட்டும் **செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு-1** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முடிவுத்திகதிக்கு பிந்திய விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

**பொருட்கள்**

- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்.
- கணனிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
- பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- இலத்திரனியல் மின்சாரப்பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்.
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- உலர் உணவு மற்றும் சுத்திகரிப்பு பொருட்கள்.
- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்.
- துணி வகைகள் வழங்குதல்.
- தளபாடங்கள் மற்றும் சேவைகள்.
- விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள்.
- சூரிய மின்கலம், உதிரிப்பாகங்கள் மற்றும் திருத்தங்கள்
- வெற்றிலை, பாக்கு மற்றும் கோயில் பூசைப்பொருட்கள்.
- கோவில் தேவைக்குரிய ஆயுள்வேத மருந்துப்பொருட்கள் கோவில் பாவனைக்குரிய பருத்தி நூல்கள் பூசைப்பொருட்கள் கற்பூரம், சாம்பிராணி
- பருப்பு, சீனி, அப்பளம் உட்பட சமையல் பொருட்கள் மற்றும் மரக்கறி எண்ணெய், தே.எண்ணெய் வழங்கல்.
- வாழை இலை, வாழைத்தடல், வாழைப்பழம்.
- துணிகளை அச்சிடல்.
- ஒலி,ஒளி அமைப்பு.
- கோவில் தேவைக்கான குடை, கொடி, ஆலவட்டம் மற்றும் பட்டுக்கள் போன்ற பொருட்கள்.
- மரக்கறி மற்றும் பழவகைகள்.
- தண்ணீர்ப் போத்தல்கள், குளிர்பான வகைகள்.
- சுத்தமான தேன், நெய், பால், வீபூதி, சந்தனம், குங்குமம் போன்றவை.
- தரமான தேங்காய்கள் மாட்டுத் தீவனம், தவிடு, பிண்ணாக்கு.
- வீரை,றபர், விறகு.

**வேலைகள்**

- கட்டிடங்கள் அமைத்தல்,
- வீதிகள் அமைத்தல்.

**சேவைகள்**

- வெல்டிங் வேலைகள்.
- பாதுகாப்பு சேவை.
- குளிரூட்டிகள்,வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- போட்டோ பிரதி இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்,
- வாகன சுத்திகரிப்பு சேவை,
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- கணனி இயந்திரங்கள், கணனி அச்சியந்திரங்கள், கணனி வலையமைப்பு முறைமை. உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி,ஒளி சேவை.
- படப்பிடிப்பு சேவை.
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்.
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- வாகனங்கள் தளபாடங்களுக்கான குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளகவேலைகள்.
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- கோவில் வாகனங்கள், கயிற்று வடங்கள், அலுமினியம் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்.
- ஏனைய சேவைகள்.

மேற்படி வழங்குனராகப் பதிவு செய்வதற்கு தாங்கள் ஒவ்வொரு சேவைக்கும் அல்லது வழங்கலுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். ஒருவர் பெயரில் மூன்று வகையான் வழங்கலுக்கு மேற்பட்ட கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது. அறங்காவலர் சபையின் முடிவே இறுதி முடிவாகக்கொள்ளப்படும்.

**மதியாபரணம் அம்பிகைபாகன்,**
**கௌரவ செயலாளர்,**
**அறங்காவலர்சபை,**
**ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்.**
**தொ.பே.இல: 021 432 3440**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் படிவம் - 2026

01.முழுப்பெயர் :- ..........................................

02.முகவரி :- ..........................................

03.தே.அ.அ.இல :- ..........................................

04.தொலைபேசி இல :- ..........................................
(தவறாது குறிப்பிடவும் )

05.நிறுவனத்தின் பெயர் :- ..........................................

06.நிறுவன முகவரி :- ..........................................

07.தங்களால் வழங்கப்படவிருக்கும் பொருள் அல்லது சேவைகளின் விபரம்

..........................................

08.விநியோக வசதி (Delivery Transport) இருப்பின் குறிப்பிடவும்.

..........................................

மேற்படி விபரங்கள் உண்மை எனவும் என்னை அல்லது எமது நிறுவனத்தை மேற்படி ஆலய வழங்குனராகப் பதிவு செய்யுமாறும் அதற்கான பதிவுக்கட்டணம் 1000/= ரூபாவினை இலங்கை வங்கி இல 7687860 செலுத்தி பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் என்றும் தங்கள் ஆலய விதிகளுக்கு அமைய சேவைப் பொருட்களைத் தேவைக்கேற்ப தரமானதாய் வழங்குவேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன். பதிவுக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

**கையொப்பம்**

..........................................

(C-4247)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடைகள் Stage 1,2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்**

எமது 27.10.2025 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட **யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக் கடைகள் Stage 1,2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான** கேள்வி அறிவித்தல் தவிர்க்க முடியாத காரணத்தினால் மீளப் பெறப்படுகின்றது. மீண்டும் கேள்வி கோருவது தொடர்பான விளம்பரம் பின்னர் பிரசுரிக்கப்படும்.

**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(2261)

## புதிய நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும்- புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக தொழிலதிபர் அகிலன் முத்துக்குமாரசாமி, செயலாளராக முத்துலிங்கம் கோகுலன், பொருளாளராக மருதை உதயகுமார் ஆகியோருடன் மேலும் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (8-30)

## கத்தியை வைத்து மிரட்டி பணம் கொள்ளை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி இயற்றாலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினுடைய முகாமையாளரின் வயிற்றில் கத்தி வைத்து மிரட்டி பணம் திருடப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு முகாமையாளரை மிரட்டி பணப்பெட்டியில் இருந்த பணத்தை கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## அமெரிக்க பொருட்கள் மீதான வரிவிதிப்பு நிறுத்தம்

### சீனா அறிவிப்பு



(பீஜிங்)

அமெரிக்கப் பொருட்களுக்கான 24 சதவீத வரியை ஒரு ஆண்டுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சீனா அறிவித்துள்ளது.

ஆசிய - பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு, கிழக்காசிய நாடான தென்கொரியாவில் உள்ள கியோங்ஜு நகரில் நடந்தது. இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக தென்கொரியா சென்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேசியிருந்தார்.

அமெரிக்காவுக்கு அரிய வகை கனிமங்கள் ஏற்றுமதிக்கான தடைக்கு ஓராண்டு விலக்கு, அமெரிக்க வேளாண் பொருட்கள் கொள்முதல் உள்ளிட்டவை குறித்து சீனா சம்மதம் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பிரதிபலனாக சீன பொருட்கள் மீது அமெரிக்கா விதித்த ஒட்டுமொத்த வரியில், 10 சதவீதத்தை குறைத்தார் ட்ரம்ப்.

தற்போது அமெரிக்க பொருட்களுக்கான 24 சதவீத வரியை ஒரு ஆண்டுக்கு தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக சீனா அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க பொருட்கள் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டு வந்த 10 சதவீத வரி தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப் பதட்டங்களை தணிக்க, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையே கடந்த வாரம் நடந்த சந்திப்பிற்குப் பிறகு இந்த நடவடிக்கை வந்துள்ளது. (ந)

# பிலிப்பைன்ஸை 'கல்மேகி' ...

- 90 பேர் உயிரிழப்பு
- வெள்ளத்தில் மிதக்கு...
- 300 வீடுகள் சேதம்
- சுமார் 180 விமானங்க...

**(மணிலா)..............** **பிலிப்பைன்ஸ் நாட்டை 'கல்மேகி' என்ற சூறாவளி தாக்கியதால் 90 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

## சத்தீஸ்கரில் இரு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### 11 பேர் உயிரிழப்பு, பலர் காயம்

(டில்லி)

இந்தியாவின் சத்தீஸ்கரில் உள்ள பிலாஸ்பூர் ரயில் நிலையம் அருகே பயணிகள் ரயில், பொருட்கள் சேவை ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோர்பா மாவட்டத்தில் உள்ள கெவ்ராவிலிருந்து பிலாஸ்பூருக்குச் சென்ற MEMU பயணிகள் ரயில், நின்று கொண்டிருந்த பொருட்கள் சேவை ரயிலுடன் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து நடந்த உடனேயே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன, காயமடைந்தவர்கள் பிலாஸ்பூரில் உள்ள தனியார் மருத்துவமனை, சத்தீஸ்கர் மருத்துவ அறிவியல் நிறுவனம் ஆகியவற்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக இந்திய ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணைகளில் பயணிகள் ரயில், சிவப்பு சமிக்ஞையை மீறி, 60-70 கி.மீ வேகத்தில் பொருட்கள் சேவை ரயிலில் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்கான துல்... யமான காரணத்தை கண்டறிய விரிவான வி... ரணைகள் ஆரம்பிக்கப்... டுள்ளன. (ந...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப் புரட்டிப் போட்ட சூறாவளி!



...தம் கார்கள்



...கள் ரத்து

உயிரிழந்தவர்களில் செபுவின் தெற்கே உள்ள மின்டானாவ் தீவில் நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்காக அனுப்பப்பட்ட பின்னர் விபத்துக்குள்ளான இராணுவ உலங்கு வானூர்தியில் பயணித்த ஆறு பணியாளர்களும் அடங்குவர்.

இலட்சக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கி சுமார் 300 வீடுகள் சேதம் அடைந்தன. பல கார்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சூறாவளி காரணமாக 180இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. (நி)


## அசைவத்திற்கு முற்றிலும் தடைவிதித்த நகரம் எது தெரியுமா?

(டில்லி)

உணவுமுறை என்று மட்டும் எடுத்துக் கொண்டால், சைவ உணவுகளை மட்டும் உண்ணுபவர்கள், அசைவ விரும்பிகள், வேகன் உணவு முறையை பின்பற்றுப வர்கள் எனப் பல வகையில் பிரிவினர் இருக்கின்றார்கள். அது தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும் விருப்பம். ஆனால் உலகில் ஒரே ஒரு நகரத்தில் மாத்திரம் அசைவம் சாப்பிடுவது முற்றிலும் தடைவிதிக்கப்பட் டுள்ளது.

குஜராத் மாநிலம் பாவ் நகர் மாவட்டத்தில் உள்ள பாலிதானா நகரம், அசைவ உணவு விற்பனை மற்றும் நுகர்வுக்குத் தடை விதித்த உலகின் முதல் நகரம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. அதன் பின்னணியில் இருக்கும் காரணம் குறித்து விரிவாக விளக்கம் கீழ் வருமாறு, பாலிதானா நகரில் உள்ள 250இற்கும் மேற்பட்ட இறைச்சிக் கடைகளை மூடுமாறு கோரி 200இற்கும் மேற்பட்ட சமண துறவிகள் நடத்திய போராட்டத்தின் விளைவாக இந்த முடிவு பெறப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அந்தவகையில், பாலிதானா நகரம் அசைவ உணவு விற்பனை மற்றும் நுகர்வுக்குத் தடை விதித்த உலகின் முதல் நகரமாக அறியப்படுகின்றது.



பாலிதானாவில் உணவு என்பது தூய்மை மற்றும் அகிம்சையை மையமாகக் கொண்ட சமண தத்துவத்தின் பிரதிபலிப்பாகும்.

மண்ணில் உள்ள உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க வெங்காயம், பூண்டு மற்றும் உருளைக்கிழங்கு போன்ற வேர் காய்கறிகளைக்கூட இவர்கள் உணவில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்து வருகின்றார்கள்.

இங்குள்ள பல சமணர்கள் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களையும் தவிர்ப்பதால், இப்பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வீடுகளில் சைவ அல்லது மண்ணிற்கு அடியில் விளையாத உணவுகள் மட்டுமே காணப்படும்.

அவ்வாறான முடிவு எட்டப்பட முக்கிய காரணம் இப்பகுதியில் குறிப்பிடத்தக்க கலாசார மற்றும் மத மாற்றத்தைக் குறிக்கிறது.

இது சமணத்தின் வலுவான செல்வாக்கையும் அதன் கொள்கைகளையும் பிரதிபலிப்பதன் காரணமாகவும், சமண துறவிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் இங்கு அசைவ உணவுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

...ல்லி
...தைக்
...விசா
...கப்பட்
(நி)



## அமெரிக்காவில் வெடித்து சிதறிய விமானம் 7 பேர் உயிரிழப்பு, 11 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சரக்கு விமானம் வெடித்து சிதறியதில், 7 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 11 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

அமெரிக்காவின் லூயிஸ்வில் விமான நிலையத்திலிருந்து சரக்கு விமானம் ஒன்று புறப்பட்டது.

விமர்னம் புறப்பட்ட சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டை இழந்தது.

பின்னர் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பற்றிக் கொண்டது.

இதனால் தீம்பிழம்புகள் உருவாகி பெரும் புகைமண்டலமே உருவானது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

ஆயிரம் கிலோ எடை கொண்ட எரிபொருளுடன் விமானம் வெடித்துச் சிதறியதே பெரிய அளவுக்கான தீ விபத்துக்கு காரணம் எனத் தகவல் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.


மேலும் 11 பேர் காயம் அடைந்துள்ளனர் என கவர்னர் ஆண்டி பெஷியர் தெரிவித்து உள்ளார்.

விபத்தில் சிக்கிய இந்த விமானம், 34 ஆண்டுகள் பழமையானதாகும்.

இந்த விமானம் 2006 முதல் சேவையில் இருந்துள்ளது.

இந்த விபத்து குறித்து தேசிய போக்கு வரத்து பாதுகாப்பு வாரியம் விசாரணை நடத்தி வருகிறது.

விமானம் கீழே விழுந்து நொறுங்கி பற்றி எரியும் போது எடுக்கப்பட்ட வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டிற்கான
## ஆயுள் காப்பீட்டுத்துறை விற்பனை விருதுகள்






16ஆவது தேசிய ஆயுள் காப்பீட்டு ஆலோசகர்கள் மன்றத்தின் (NAFLIA) போது நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான ஆயுள் காப்பீட்டுத் துறை விற்பனை விருதுகளில் இலங்கை காப்பீட்டு ஆயுள் (SLICLL) விற்பனைக் குழு அங்கீக ரிக்கப்பட்டது.

இந்த சிறப்பு விருது வழங்கும் விழா, ஆயுள் காப்பீட்டுத் துறையில் சிறந்து விளங்குபவர்களின் விதி விலக்கான சாதனைகளைக் கொண் டாடியது.

இலங்கை காப்பீட்டு ஆயுள் நிறு வனத்தின் யாழ்ப்பாணக் கிளை யைச் சேர்ந்த ஏ. சுபேசன் மற்றும் கிரிபத்கொட கிளையைச் சேர்ந்த அமில பிரசாத் ஆகியோர் முறையே சிறந்த கிளை மேலாளர் மற்றும் சிறந்த மேற்பார்வையாளர் பிரிவு களின் கீழ் விருதுகளைப் பெற்ற னர்.

அவர்கள் பெரிய அளவிலான நிறுவனப் பிரிவு மற்றும் தேசிய அளவில் முறையே வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளைப் பெற்ற னர்.

இந்த நிகழ்வு 2025 செப்ரெம்பர் 8 ஆம் திகதி ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டையில் உள்ள மோனார்க் இம்பீரியல் வளாகத்தில் நடை பெற்றது.

# "அரசாங்க வட்டியற்ற கடன் திட்டம் வடமாகாணத்தில் SLIIT Northen UNI இல்"

வர்த்தக உலகம்

விளம்பர விபரணம்

SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

**அறிமுகம்**

இலங்கையின் க.பொ.த (உயர்தர) பெறுபேறு களுக்கு அமைய 25 வீத மான மாணவர்கள் மாத் திரமே அரச பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப் படுகின்றனர். எனினும் அரச பல்கலைக்கழகங் களில் ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாத பெரும்பான்மையான க.பொ.த உயர்தர தகைமை கொண்ட மாணவர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்த உள்நாட்டு நிறு வனங்களில் அல்லது பல் கலைக்கழக சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உள் நாட்டு அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனங்களில் உயர்கல்வியை தொடர வதற்கு பாடநெறி கட்ட ணத்தை செலுத்தமுடியா துள்ளது.

இத்தேவையினை கருத் திற் கொண்டு இலங்கை யில் க.பொ.த (உயர்தர) கல்வியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்க ளுக்காக உயர்கல்வி வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை பெறுவ தெற்கென வட்டியற்ற கடன் திட்டம் 2017ஆம் ஆண்டு தொடக்கம் கல்வி அமைச் சின் கீழ் அமுல்படுத்தப் பட்டது.

இத்திட்டத்தினால் கல்வி அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்ட அனைவராலும் எதிர்பார்க்கப்படும் மற்றும் தொழில்சார் பெறுமதிமிக்க பட்டபடிப்பினை மேற்கொள் வதற்கான அரசாங்கத்தின் வட்டியற்ற கடன் நிதியினை வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

முதன் முறையாக கற்கை நெறிகளுக்கு **அர சாங்க வட்டியற்ற மாண வர் கடன் திட்டத்திற்கு அனுமதி பெற்ற நிறுவ னமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் SLIIT Northern UNI** அங்கீகாரம் பெற்றுள்ளது.

SLIIT Northern UNI யானது SLIIT உடன் இணைந்து SLIIT இன் பட்டபடிப்புகளை வழங்கும் நிறுவனமாக 2023ஆம் ஆண்டு தொடக்கம் சிறப் பான கல்விச் சேவையினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இது தொழில் தகை மையை உயர்கல்வி கற் றல் திட்டங்களினுடாக வழங்கும் ஒரு கல்வி நிறு வனம் ஆகும். அத்துடன் மூன்று பாடங்களிலும் சாதாரண (S) சித்திகளைப் பெற்று (க.பொ.த உயர் தரத்தை) அரச பல்கலைக் கழகங்களுக்கு தகுதி பெறாத மாணவர்கள் உயர் கல்வியை தொடரும் முக மாக அரசாங்கத்தால் அறி முகப்படுத்தப்பட்ட **வட்டி யற்ற மாணவர் கடன் திட்டத்திற்கு வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங் களில் SLIIT Northern UNI மட்டுமே அங்கீ காரம்** பெற்ற ஒரு நிறுவன மாகும்.

**அரசாங்க வட்டியற்ற மாணவர் கடன் திட்டத் திற்கான குறைந்தபட்ச தகைமைகள்**

**1.** 2022, 2023 மற்றும் 2024 ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**2.** மூன்று முறைக ளுக்கு மேற்படாத க.பொ.த உயர்தரத்தில் (அனைத்து பிரிவுகள்) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சாதா ரண சித்தி (S) பெற்றி ருத்தல்.

**3.** க.பொ.த உயர்தர பரீட்சையில் பொது ஆங் கிலத்தில் சாதாரண (S) சித்தி அல்லது க.பொ.த சாதாரண தர ஆங்கிலத் தில் சாதாரண (S) சித்தி பெற்றிருத்தல்.

**4.** மூன்று தடவைக ளுக்கு / முறைகளுக்கு மேற்படாத எந்த அமர் விலும் க.பொ.த உயர்தர பொது அறிவில் (General Knowledge) குறைந்த பட்சம் 30 புள்ளிகள் பெற் றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட தகுதி யுடைய மாணவர்கள் அர சாங்க வட்டியற்ற கடன் திட்டத்தினூடாக SLIIT Northern UNI இல் **கல்வி அமைச்சினால் அனுமதி பெற்ற கற்கை நெறிகளான தகவல் தொழில்நுட்பம் (4 வரு டம்) மற்றும் வியாபார முகாமைத்துவம் (4 வரு டம்)** என்பவற்றில் பட்டப் படிப்புகள் மேற்கொள்ள முடியும்.

**கடன் தொகை**

**தகவல் தொழில்நுட்ப** கற்கை நெறிகளுக்கு **ரூபா 1,000,000** வட்டியற்ற கடனையும் **வியாபார முகாமைத்துவ** கற்கை நெறிகளுக்கு **ரூபா 900,000** வட்டியற்ற கட னையும் பெற்றுக்கொள்ள லாம்.

மேலும் மாணவர்களின் **வாழ்வாதார தேவை களுக்கென அவர்களின் விருப்பத்திற்கு அமைய நான்கு வருடங்களும் மொத்தமாக வழங்கப்ப டும் 300,000 ரூபாவில் உயர்ந்தபட்சம் வருட மொன்றிற்கு 75,000 ரூபாவை** பெற்றுக்கொள்ள லாம்.

**கடன் மீள் செலுத்துதல் தொடர்பான விபரம்**

இந்த 4 வருட பட்ட கற்கையினை பூர்த்தி செய்த பின்னர் 1 வருடம் சலுகை காலமாக வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து வரும் 8 வருடங்களில் கடன் மீள் செலுத்தப்படுத்தல் அவ சியம். கல்வியை தொடரும் காலத்தில் கடனை மீள் செலுத்தப்பட வேண்டிய தில்லை.

**SLIIT Northern UNI இனால் வழங்கப்படும் பட்டப்படிப்புக்கள்**

இக் கடன் திட்டத்தின் கீழ் கல்விபெறும் மாணவர்கள் SLIITனுடைய 4 வருட பட்டத்தினை பெறுவர். இதன் பிரகாரம் SLIIT Northern UNI இல் வழங்கப்படுகின்ற முழு நேர வார நாள் பட்டப் படிப்புக்கள் பின்வருமாறு

**BSc (Hons) in Infor mation Technology, Specialising in**

- Artificial Intelligence
- Software Engineering
- Data Science
- Information Technology
- Cybersecurity

**BBA (Hons), Specia lising in**

- Accounting and Finance
- Business Analytics
- Huma Capital Management
- Business Mana gement
- Marketing Mana gement
- Logistic and Supply Chain Management

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்படி கற்கை நெறி களை ஆரம்பிப்பதற்கும் அரசாங்க வட்டியற்ற கடன் திட்டத்தினூடாக விண்ணப் பிப்பதற்கும் கீழே தரப்பட்ட இரு இணைப்புகளையும் (Link) பூர்த்தி செய்வதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

✦ **SLIIT Northern UNI யில் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு:**
https://norther nuni.lk/application-form/

✦ **வட்டியற்ற கடன் திட்டத்திற்கு விண்ணப் பிக்கும் முறை:**
www.studentloans.mohe.gov.lk

உங்கள் விண்ணப் பங்களை **01.11.2025ஆம்** திகதி முதல் **30.11.2025** ஆம் திகதி வரை சமர்ப்பிக் கலாம்.

மேலதிக விபரங்களுக்கு **021 753 4807** தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

## சுகத் வசந்த டி சில்வா

**(கிளிநொச்சி) ....................... விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.**

மாற்றுத்திறனாளிகளினுடைய தேவைகள் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற செயற்குழுவின் கலந்துரையாடல் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "1996 ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகளுக்காக இருந்த சட்டவரைபில் புதிய திருத்தங்களை உருவாக்க இருக்கின்றோம்.

அதாவது நாட்டில் 8.7 பேர் இயலாமை உடையவர்களாக காணப்படுகின்றார்கள் இவர்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

இவர்களுக்காக வழங்கப்படுகின்ற 20 ஆயிரம் ரூபா உதவித் தொகை கொடுப்பனவை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க உள்ளோம்.

அத்தோடு, பத்து லட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டங்களை மேலும் பத்து லட்சம் ரூபாய் அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளும் மற்றும் அதே போல ஏனைய திட்டங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (8)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி 12 மாணவர்கள் வைத்தியசாலையில்

(வவுனியா) வவுனியாவில் 12 மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் வவுனியா வடக்கு ஒலுமடு மகாவித்தியாலயத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை சென்று கொண்டிருந்த வேளை மரத்தில் இருந்த பப்பறக் கொப்பான் குளவிகள் கலைந்து வீதியால் சென்ற மாணவர்கள் மீது தாக்கியுள்ளது. இதில் பாதிப்படைந்த 12 மாணவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 220 | 300 | 320 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 300 | 200 |
| தக்காளி | 180 | 200 | 200 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 200 |
| கோவா | 200 | 180 | 200 | 200 | 170 |
| கரட் | 220 | 250 | 250 | 300 | 240 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 |
| புடோல் | 160 | 250 | 200 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 300 | 350 | 150-250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 | 155 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 800 | 400 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 250 | 150 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 250 | 300 | -- |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 | 150 |
| லீக்ஸ் | 180 | 250 | 250 | 300 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 200 | 100 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 800 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 400 | 300 |
| போஞ்சி | 600 | 450 | 600 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 300 | -- |
| கீரை – 1 பிடி | 140 | 80-140 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 1600 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 210 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 800 | 850 | 600 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | -- |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 80 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | -- |

# இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்) கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் கோப்பாய் பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் இலக்கிய விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபையின் தலைவருமான ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர். தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# கௌரவிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி) யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் சத்தியசோதி, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் க.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-30)

# இராசிபலன்

06.11.2025
ஐப்பசி 20, வியாழக்கிழமை
பிரதமை பிற்பகல் 5.22 மணி வரை

பரணி முற்பகல்8.45 மணிவரை
சுப நேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்
சித்திரை.

வளவன்



மேஷம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



கடகம்

ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், காரிய அனுகூலமுண்டு.



துலாம்

ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கவலை தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளைச் செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.



மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்துசேரலாம்.



ரிஷபம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.



சிம்மம்

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.



விருச்சிகம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



கும்பம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.



மிதுனம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



கன்னி

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.



தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.



மீனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்கள் ஏற்படலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**நீ நல்ல நண்பனை அடைய விரும்பினால் நீ நல்லவனாக இரு.**

noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 902





அது போகட்டும்! முதன மந்திரி நேற்று இங்கு அடித்த புயல் நாகப்பட்டினத்தில் இன்னும் கடுமையாக இருந்திருக்குமே? இளவரசனுக்கு மறுபடியும் ஏதேனும் தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே என்று என் நெஞ்சம் துடிக்கிறது."

"பிரபு, சோழ நாடு அதிஷ்டம் செய்த நாடு. இப்போது இந்நாட்டுக்கு மகத்தான நல்ல யோகம் ஆகையால்," "சோழ நாடு அதிஷ்டம் செய்த நாடு தான் ஆனால் நான் துரதிர்ஷ்டசாலியாயிற்றே, பிரம்மராயரே! நான் கண்ணை மூடுவதற்குள் என் புதல்வர்களை ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன்"

"ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், இத்தகைய புதல்வர்களையும், புதல்வியையும் பெற்ற தங்களைப் போன்ற பாக்கியசாலி யார்? இதோ இன்றைக்கே ஆட்களை அனுப்பி வைக்கிறேன். இளவரசரைப் பத்திரமாய் அழைத்து வருவதற்கு என் சீடன் திருமலையையும் கூட அனுப்புகிறேன்!" என்றார் முதன்மந்திரி.

அப்போதுதான் சக்கரவர்த்தி ஆழ்வார்க்கடியான் மீது தம் பார்வையைச் செலுத்தினார்.

"ஆகா! இவன் இத்தனை நேரமும் இங்கே நிற்கிறானா? சின்னப் பழுவேட்டரையர் இவனைப் பற்றித் தானே சொன்னார்? பழுவூர் அரண்மனை மதிலில் ஏறிக் குதித்தவன் இவன்தானே?"

"பிரபு, அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. அதைப் பற்றி நாளைக்குத் தெரியப்படுத்த அனுமதி கொடுங்கள். ஏற்கனவே மிக்க களைப்படைந்து விட்டீர்கள்!" என்றார் முதன் மந்திரி.

இச்சமயத்தில் மலையமான் மகளும், குந்தவையும் வானதியும் சக்கரவர்த்தி அறைக்குள்ளே வந்தார்கள். "முதன்மந்திரி! இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சக்கரவர்த்திக்கு அதிகக் களைப்பு உண்டாகக் கூடாது என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள்!" என்று மகாராணி கூறினாள்.

பின்னர், "இந்தப் பெண் இனிமையாகப் பாடுவாளாம். ஒரு தேவாரப் பாடல் பாடச் சொல்லுங்கள். சக்கரவர்த்திக்குக் கானம் மிகவும் பிடிக்கும்" என்றாள்.

"ஆகட்டும் தாயே! என் சீடன் கூட ஆழ்வார் பாசுரங்களை நன்றாகப் பாடுவான் அவனையும் பாடச் சொல்கிறேன்!" என்றார் முதன்மந்திரி. பூங்குழலி "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற அப்பர் தேவாரத்தைப் பாடினாள்.

ஆழ்வார்க்கடியான் "திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்" என்ற பாசுரத்தைப் பாடினான்.

பாடல் ஆரம்பித்ததும் சுந்தர சோழர் கண்களை மூடிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் முகத்தில் சாந்தியும் நிம்மதியும் காணப்பட்டன.


மூச்சு நிதானமாகவும் ஒரே மாதிரியாகவும் வந்தது. நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டார் என்று தெரிந்தது. இருட்டுகிற சமயமாகி விட்டபடியால் தாதிப் பெண் விளக்கேற்றிக் கொண்டு வந்து வைத்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆனந்தர் ஞானம் பெற்ற கதை



இளவரசர் சித்தார்த்தர் ஞானம் பெற்று கௌதம புத்தர் ஆனதும் அவருடன் வந்து சேர்ந்தார் புத்தரின் நெருங்கிய உறவினர் ஆனந்தர். இவர் புத்தர் மீது கொண்ட அன்பால் அவருடைய சீடனாகிவிட்டார்.

அதுமட்டுமல்ல மற்ற சீடர்களை விட புத்தரிடம் தனக்கு அதிக உரிமை உண்டு என நினைத்தார். அதன் படியே நடந்து கொண்டார்.

ஒரு நாள், "சித்தார்த்தா! நான் உனக்கு அண்ணன் முறை. நான் என்ன சொன்னாலும் நீர் கேட்க வேண்டும். எனக்காக நான் சொல்லும் மூன்று கட்டளைகளை ஏற்க வேண்டும், என்றார்.

"அந்த மூன்று கட்டளைகள் என்ன?" என்று கேட்டார் புத்தர்.

"நான் எப்பொழுதும் உம்முடனேயே இருக்க வேண்டும். எந்தச் சூழலிலும் என்னை வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடாது. நான் உம்மைச் சந்திக்க யாருக்கு அனுமதி தந்தாலும் நீர் சந்திக்க வேண்டும். நள்ளிரவாக இருந்தாலும் முடியாது என்று சொல்லக்கூடாது. மூன்றாவதாக நீர் உறங்கும் போது உமது அருகிலேயே நான் உறங்க வேண்டும். வேறு அறைக்குச் சென்று துங்கு என்று என்னிடம் சொல்லக் கூடாது. சரியா," என்றார்.

"அப்படியே செய்கிறேன்!" என்று வாக்குறுதி தந்தார் புத்தர். நாற்பத்திரண்டு ஆண்டுகள் புத்தருடனே தங்கியிருந்தும் ஆனந்தர் ஞானம் பெறவில்லை.

வெகு தொலைவிலிருந்து வந்து புத்தரின் சீடர்களான சிலர் சில நாட்களிலேயே ஞானம் பெற்றதை அறிந்த ஆனந்தர் தனக்கு மட்டும் ஏன் ஞானம் கிடைக்கவில்லை என்று வருந்தினார்.

இறக்கும் நிலையில் இருந்தார் புத்தர். அவரிடம் ஆனந்தர், "இரவும் பகலும் உம்மைப் பிரியாமல் நாற்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து விட்டேன். இன்னும் நான் ஞானம் பெறவில்லை. நீர் இறந்தபின் என் நிலை என்ன ஆகும்?" என்று கண்களில் கண்ணீர் வழியக் கேட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் கண்டெடுத்த 5 ரூபாயைக் காட்டிலும் உழைப்பினால் பெற்ற ஒரு ரூபாயின் மதிப்பு அதிகம்.
– ஆபிரகாம் லிங்கம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

## வீதிகளை ஆக்கிரமிக்கும் வாகனங்களின் தரிப்புகள்

பொதுச் சட்டங்களைப் பின்பற்றுகின்ற மனநிலையை மக்களிடம் ஏற்படுத்தவேண்டும். பொதுவில் பொதுச் சட்டங்களைப் பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட நாடுகள் மிக உயர்ந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

இதற்கும் அப்பால், அந்த நாடுகளில் மனித உரிமைகள் – மனித விழுமியங்கள் நூறு வீதம் பாதுகாக்கப்படுவதையும் காண முடியும்.

அதேநேரம் எந்த நாடுகளில் பொதுச் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனவோ – பொது விதிமுறைகள் மீறப்படுகின்றனவோ அந்த நாடுகளில் களவு, கொள்ளை, அடாவடித்தனம், நாட்டாமை என்பன மலிந்து காணப்படும்.

இத்தகைய நாடுகளில் மனித உரிமைகளும் மனிதநேயங்களும் வீழ்ச்சி கண்டிருக்கும்.

இதற்கு நம் இலங்கை போன்ற நாடுகள் தக்க உதாரணங்களாகும்.

ஆம், தமது வீட்டுக் கழிவுகளைத் தெருவில் கொட்டுகின்ற மனநிலை மக்கள் மத்தியில் இருக்குமாயின், தங்கள் வீட்டில் வளர்த்த நாய்களை – அவற்றின் குட்டிகளை தெருவிலும் சந்தைகளிலும் விட்டுவிடுகின்ற வக்கிரத்தனங்கள் மக்களிடம் ஏற்பட்டிருக்குமாயின், அங்கு அனைத்துச் சட்டவிரோதங்களும் சர்வசாதாரணமாக நடந்தேறும் என்பது சர்வநிச்சயம்.

எனினும் மேற்கூறிய குறைகளைக் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலேயே எங்களின் முன்னேற்றங்களும் எங்கள் வாழ்வியலில் அமைதியும் உருவாக முடியும்.

இப்போதெல்லாம் நம் வடபுலத்தில் அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிப்பதென்பது மிகக் கடினமான விடயமாகி விட்டது.

இதற்கு வாகனங்களின் பெருக்கம் என்பதற்கு அப்பால், வீதிகளின் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைக்கும்போது அந்த வீதியின் கணிசமான பகுதி ஆக்கிரமிக்கப்படுகின்றது.

இதனால் அந்த வீதியால் வாகனங்கள் பயணிப்பது மிகக் கடினமானதாகவும் ஆபத்து நிறைந்ததாகவும் உள்ளது.

அதிலும் சிலர் சண்டித்தனப்பாங்குடன் வீதியின் நடுப்பகுதிவரை ஆக்கிரமித்து வாகனங்களை நிறுத்தி வைக்கின்றனர்.

இதற்கும் மேலாக, வாகனத்திருத்துமிடங்கள் இருக்கின்ற வீதிகளைச் சொல்லவும் வேண்டியதில்லை.

இத்தகைய நிலைமை ஆரோக்கியமான பயணத்துக்குப் பெரும் தடையாக அமைகிறது.

எனவே இதுவிடயத்தில் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகள் அதீத கவனம் செலுத்தி, வீதிகளை ஆக்கிரமித்து வாகனங்கள் நிறுத்தப்படுவதை முழுமையாகத் தடுக்க வேண்டும்.

அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைக்க மறுப்பார்களாயின், அத்தகையவர்களை நீதிமன்றில் நிறுத்தி இடையூறு இல்லாத போக்குவரத்துக்கு ஏற்றவாறு வீதிகளை ஆளுகை செய்வது மிக அவசியம்.

## நவ.10 முதல் டிச.5 வரை உயர்தரப் பரீட்சை
## இணையத்தில் போலி வினாத்தாள்களை பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைகள் தொடர்பான பயிற்சி வகுப்புகள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தடைக் காலத்தில் சமூக ஊடகங்களில் போலி வினாத்தாள்கள் எதிர்பார்க்கை வினாக்கள் போன்ற பதிவுகளை இடுகையிடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் ஊடாகத் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சை நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் ஐந்தாம் திகதி வரை பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

மொத்தம் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 525 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 365 தேர்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் தேர்வை சுமூகமாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## பனிக்கன் குளப்பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(மாங்குளம்)

மாங்குளம் பனிக்கன் குளம் பகுதியில் புகையிரத தண்டவாளத்துக்கு அருகில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் புகையிரதத்திலிருந்து தவறி விழுந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் யார் என அடையாளம்காணப்படாத நிலையில் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## மாவீரர் துயிலும் இல்லங்களை புனிதப்படுத்தும் பணி ஆரம்பம்

(முள்ளிவாய்க்கால்)

தாயகக் கனவுக்காக தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவு வாரம் நெருங்கி வரும் நிலையில் தமிழர் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தின் துப்பரவுப் பணியும் மாவீரர் நாள் பணிக்குழுவின் நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம்ரவிகரன் எம்.பியின் பங்கேற்புடன் இடம் பெற்றிருந்தது. (ம-7)

## சாவகச்சேரி நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் 110 கியூப் மணல், சவள், மண்வெட்டி என்பன நாளை மறுதினம் (08) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏலத்தில் கலந்து கொள்ள இருப்பவர்களுக்கான அறிவுறுத்தல்களை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காசோலைகள் மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப்பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 11.11.2025 மற்றும் 12.11.2025 ஆந் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## மீசாலை பொது நூலகத்தின் வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

மீசாலை பொது நூலகத்தின் ஏற்பாட்டில், தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில்,

பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பிரான்சிஸ் சத்தியசோதி அவர்களும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இ.அபிராமி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக, "மாந்துளிர்" என்ற நூல் வெளியீட்டு வைபவமும் விசேட நிகழ்வாக இடம்பெற உள்ளது.

அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகத்தால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் இதன் போது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## யாழில் திரைக்கு வரும் 'தேவதை' திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

பிரபல தென்னிந்திய நடிகர் நாசரின் இயக்கத்தில் இளையராஜாவின் இசையமைப்பில் 1997 ஆம் ஆண்டு வெளிவந்த "தேவதை", திரைப்படம்யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தினரால் நாளை மறுதினம் (8) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு 18/2, அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இலவசமாகத் திரையிடப்படவுள்ளது.

"தேவதை" திரைப்படம், மானுட உணர்வுகளின் வெவ்வேறு நிலைகளை யதார்த்தமும் புனைவும் கலந்த வடிவத்தில் வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான படைப்பாகும்.

இது ரசிகர்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய திரைப்படமாக இன்றளவும் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025

‘உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்’



மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2025



## பண வரத்து சீராக இருக்கும்!

கிரகநிலை - இராசியில் சூரியன், புதன் (வ) - தன வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் சனி (வ), ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் பண வரத்து சீராக இருக்கும். வேலைப் பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அயலவர்களுடன் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கௌரவம் பாதிக்கும் படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள், மேல் அதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சினைகள் ஏற்பட்டு அதனால் வாக்குவாதம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை அதிகரிக்கும். மாணவர்கள் அடுத்தவரை பற்றிய விமர்சனங்களை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

**சித்திரை 3, 4ஆம்பாதங்கள்:** இந்த மாதம் மாணவர்கள் சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. கல்வியில் வெற்றி பெற கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மனதில் கொண்ட குறிக்கோளை அடையும் வரை சுறுசுறுப்பாக செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். கெட்ட




கனவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம்.

**சுவாதி:** இந்த மாதம் எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும் அதனால் திடீர் பண நெருக்கடி வரலாம். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். பண வசூல் தாமதப்படலாம். வீண் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தேவையற்ற பயணம் செல்ல நேரலாம். கூடுதல் பொறுப்புகள், அடுத்தவர் பணியை செய்வது போன்றவையும் வந்து சேரும்.

**விசாகம் 1, 2, 3 ஆம்பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தருவதாக இருக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலை உண்டாகலாம். எதிர்பாராத செலவு உண்டாகும். அடுத்தவர்களிடம் பழகுவதில் கவனம் தேவை. பணவரத்து தாமதப்படும். கலைத்துறையினருக்கு சோதனைகள் மிகுந்த காலமாக இருக்கும். வாய்ப்புகள் இருந்தாலும் உடல் ஆரோக்கியம் குறைவாக இருக்கும்.

**பரிகாரம்:** விநாயக பெருமானை வணங்குவது நன்மை தரும்

சந்திராஷ்டம தினங்கள்:
07, 08.

அதிஷ்ட தினங்கள்:
16, 17.



## பொருளாதார நிலை உயரும்!


கிரகநிலை - இராசியில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் சனி (வ), ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சுக்கிரன் - விரைய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். எதிர்த்து செயற்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஓடர்கள் வரும். பண வரத்து திருப்தி தரும். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சினையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்புக் கூடும்.

பெண்கள் எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் சிறு பிரச்சினையாக இருந்தாலும் கவனத்துடன் இருப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு முன்னேற்றத்தில் தடைகள் இருக்கும். பொறுமையாக கையாள்வதன் மூலம் பெரிய பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். மிகவும் பொறுமையாக செயற்பட வேண்டிய காலகட்டம் இது. மாணவர்கள் எந்த ஒரு பாடத்தை




படித்தாலும் கவனத்தை சிதற விடாமல் படிப்பது அவசியம். விளை யாடும் போது கவனம் தேவை.

**அனுஷம்:** இந்த மாதம் எதிலும் இலாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பண வரத்து அதிகரிக்கும். துணிச்ச லாக எதிலும் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. அவருக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். சிலருக்கு இடமாற்றம் உண்டாக லாம். நண்பர்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**கேட்டை:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இலாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். புதிய ஓடர்கள் கூடுதலாக உழைப்பதன் மூலம் கிடைக்கும். வாடிக்கையாளர்களை திருப்தி செய்ய முற்படுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள். கணவன் மனைவிக்கு இடையே சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் மூலம் மதிப்பு உயரும்.

**பரிகாரம்:** ஆஞ்சநேயரை வணங்கி வர பொருளாதாரம் மேம்படும்

**சந்திராஷ்டம தினங்கள்:**
09, 10.

**அதிஷ்ட தினங்கள்:**
18, 19 .

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவிலில்...

துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர் ஒருவரைச் சந்தேக நபர் பார்வையிட வந்த வேளை பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு குடும்பங்களுக்கு இடையிலான பிரச்சினையைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர் உட்பட பலர் கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞனை அவரது தாய்க்கு முன்னால் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி, சித்திரவதை புரிந்து கட்டி வைத்து மிக மோசமான முறையில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

சித்திரவதை மற்றும் தாக்குதல்களை மேற்கொள்ளும்போது, தாக்குதலாளிகள் அவற்றைக் கையடக்க தொலைபேசியில் வீடியோ மற்றும் புகைப்படங்களை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் சுமார் 15 பேர் வரையில் பொலிஸார் அடையாளம் கண்டு கொண்டனர்.

அவர்களில் ஒரு சிலரை மாத்திரம் கைது செய்து வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

பிரதான சந்தேகநபர் உள்ளிட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதிலும், பொலிஸார் பிரதான சந்தேக நபரைக் கடந்த 11 மாதங்களாகக் கைது செய்யவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,33)

## தெதுரு ஓயாவில்...

டைய இளைஞர்கள் சிலர் நேற்று மாலை தெதுரு ஓயாவிற்கு நீராடச் சென்ற நிலையில் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

கிரிபத்கொடையிலிருந்து சுற்றுலா சென்ற இளைஞர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். (ம-7)

## வவுனியாவில்...

மீட்கப்பட்டிருந்தார்.

பெண்ணின் கணவர் அவரது 2 வயதுப் பெண் குழந்தையுடன் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று பொலிஸில் சரணடைந்துள்ளார்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## ஹெரோயினுடன்...

இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர், சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## அநுர அரசின்...

அநுர குமார திஸாநாயக்கவால் குறித்த வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம-7)

## பசிலுக்கு...

குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கையூட்டல், ஊழல் மற்றும் விரயத்திற்கு எதிரான பிரஜைகள் சக்தி அமைப்பின் தலைவர் காமந்த துஷார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த முறைப்பாடுக்கு அமையவே, இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் விபரங்கள், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட, ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 2010 ஜூன் முதல் 2014 நவம்பர் மாத காலப்பகுதியில், பசில் உள்நாட்டுப் பயணங்களுக்காக வான் படை வானூர்திகளைப் பயன்படுத்தியதாகவும், "மகநெகும" திட்டத்திலிருந்து சுமார் 16 கோடி செலவழித்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட மூன்று சொகுசு வாகனங்கள் உட்பட ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 14 வாகனங்கள் மற்றும் 11 ஏனைய வாகனங்களைப் பயன்படுத்தியதன் மூலம், அரசுக்கு 61 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2010 ஜனவரி 10ஆம் திகதி முதல் 2015 ஜனவரி 10 ஆம் திகதி வரை 64 கடற்படை வீரர்களும் மற்றும் 84 இராணுவ வீரர்களும் அவரது தனிப்பட்ட பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டதாகவும் அவர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக 26 கோடிக்கும் அதிக ரூபாய் அரச நிதியிலிருந்து செலவிடப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம-7)

## 3 மாதக்...

நேற்று முன்தினம் திடீரென விக்கல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது தாயார் குழந்தைக்கு பாலைப் பருக்கி உறங்க வைத்துள்ளார்.

சிறிது நேரத்தின் பின் குழந்தை அசைவற்றுக் காணப்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை, குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

வேலைவாய்ப்பு
யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்களில் விற்பனை உதவியாளர்கள் தேவை.
பகுதிநேரமாகப் பணிபுரிய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
விரும்பின் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்து தரப்படும்.
077 843 5224
077 603 1723
(5826)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 6004
D 5 6 4 2 5 1
அத சம்பத
D 4 2 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 0579

சுப தவசக
திகதி 2025.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 120
மகரம் 22 26 53

தன நிதானய
திகதி 2025.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 2034
V 10 19 36 69 V

மெகா பவர்
திகதி 05/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2352
S 09 19 36 50 71

ஜய
திகதி 2025.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 0272
M 5 7 8 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4246
சீட்டிழுப்பு திகதி 05.11.2025
F 14 50 52 65
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 1313
கடகம் 06 27 45 47 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.11.2025 வெற்றி வாரம் 0712
ஆங்கில எழுத்து 0
5 1 4 5 3 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,943,746.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2978
சீட்டிழுப்பு திகதி 2025.11.05
தினம் புதன்கிழமை
02 08 44 65 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,619,868.80

சனிதா
திகதி 05.11.2025 வெற்றி வாரம் 5139
14 49 57 60 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,257,646.00

சசிரி
வெற்றி வாரம் 808
சீட்டிழுப்பு திகதி 05.11.2025
புதன்கிழமை
04 08 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00


சீட்டிழுப்பு வாரம் 4690
சீட்டிழுப்பு திகதி 05.11.2025
தினம் புதன்கிழமை
07 10 23 32
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,189,002.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 35 37 41 51 62
2154
05.11.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.604,982,484.80

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2804
சீட்டிழுப்பு திகதி : 2025.11.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,301,125.60
06 30 47 52 R
ADA KOTIPATHI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



வவுனியா மாவட்ட செயலகத்தில்
பணிப்பாளர் - திட்டமிடல் (பதில்) ஆகக் கடமையாற்றி
06.11.2025இன்று பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற

## உயர்திரு.விஜயானந்தம் முகுந்தன்

(இலங்கை திட்டமிடல் சேவை - தரம் II)

B.Sc, PGDDS, MDS

### சேவை விபரங்கள்

| இல | பதவிகள் | காலப்பகுதி | சேவையாற்றிய நிலையம் |
|---|---|---|---|
| 01 | பட்டதாரி பயிலுநர் | 10.10.1994 - 02.07.1997 | பிரதேச செயலகம் - வெங்கலசெட்டிக்குளம் |
| 02 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03.07.1997 - 31.07.2004 | மாவட்ட செயலகம் - வவுனியா |
| 03 | உதவித் திட்டப் பணிப்பாளர் | 01.08.2008 - 21.06.2009 | NECORD Project |
| 04 | இலங்கை திட்டமிடல் சேவை (பயிற்சி) | 22.06.2009 - 31.12.2009 | இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம்(SLIDA) |
| 05 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 01.01.2010 - 22.10.2010 | பிரதேச செயலகம் - துனுக்காய் |
| 06 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 23.10.2010 - 16.04.2015 | பிரதேச செயலகம் - ஒட்டிசுட்டான் |
| 07 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 17.04.2015 - 16.06.2019 | மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு |
| 08 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர்(பதில்) | 29.10.2015 - 30.04.2019 | பிரதேச செயலகம் - வெலி ஓயா |
| 09 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 17.06.2019 - 03.11.2020 | மாவட்ட செயலகம் - வவுனியா |
| 10 | பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் | 04.11.2020 - 05.04.2022 | பிரதேச செயலகம் - வவுனியா |
| 11 | பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் | 06.04.2022 - 17.12.2023 | மாவட்ட செயலகம் - வவுனியா |
| 12 | பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் (பதில்) | 18.04.2022 - 16.11.2023 | பிரதேச செயலகம் - வவுனியா தெற்கு |
| 13 | திட்டமிடல் பணிப்பாளர் (பதில்) | 18.12.2023 - 15.02.2024 | மாவட்ட செயலகம் - வவுனியா |
| 14 | பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் | 16.02.2024 - 07.05.2025 | மாவட்ட செயலகம் - வவுனியா |
| 15 | திட்டமிடல் பணிப்பாளர் (பதில்) | 08.05.2025 - 06.11.2025 | மாவட்ட செயலகம் - வவுனியா |

கௌரவமான அரச சேவையில்
கால்பதித்த அபிவிருத்தி உத்தியோகம்
கொண்ட கடமைகள் விளைத்த பயன்களால்
ஊர் விரும்பும் உத்தம புருசராய்
ஆற்றிய சேவைகள் ஆற்று வெள்ளம்!

அளவிடற்கரிய பணிச்சுமை இருப்பினும்
உயரிய சேவையின் உன்னதம் போற்றும்
உயர்ந்த மனிதர்; கனிந்த உளத்தர்
விசாலப் பார்வையால் வேலையை
எளிதாக்கும் விற்பனர்!

எண்ணியவை எண்ணியாங்கு
எல்லோரும் பெற்றுய்யும் வண்ணம்
சமத்துவம் பேணும் நல் குணக்குன்று
சிறிதும் சளைத்திடா முயற்சியாளர்
சினமெனும் வெம்மை கொன்ற புனிதர்!
ஐயன்! சேவையில் ஓய்வு நிலை காணும் தருணம்
வாழ்வில் நன்மைகள் விளையவும் நலம் பல பெருகவும்.
இன்பங்கள் சூழ இல்லம் சிறக்கவும்
ஆயுள்வரை ஆனந்தம் - நீளவும்

(5834)

வாழ்த்துவோர்: வட மாகாண இலங்கை திட்டமிடல் சேவை
உத்தியோகத்தர் சங்கம்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சரவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4267)

076 825 7716 (ஆகாஸ்)



வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுனர்
ஆண் வயது : 30 - 50
பெண் வயது : 20 - 30
(5837)
தொடர்புகளுக்கு :
076 028 9835, 077 590 6482



வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம்
போகாமை | வாதம் | வயிற்றுப்புண் | Gastritis | அல்சர்
மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை,
Acu சிகிச்சைகள் | அட்டாங்க யோகம் கற்கலாம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(5838)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4265)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



யாழ்ப்பாணத்தில் Voyzant
சுற்றுலாப் பயணம்


மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.



மேலதிக விபரங்களுக்கு : Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)


# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 03 - 1942



இறப்பு 03 - 11 - 2025

## நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம்

(செல்வண்ணா) (பத்திரிகை முகவர் - நெல்லியடி)

முதலாம் தெரு துரையன்தோட்டம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம் அவர்கள் கடந்த (03.11.2025) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - மாணிக்கவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சலேத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிலில்லி கனகமணி அவர்களின் அன்புக் கணவரும் அமுதா, அமலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செபஸ்ரியன்ஜீவகுமார் அவர்களின் அன்பு மாமனாரும் ஏவான் அன்ரோவின் அன்புப் பேரனும், அமரர் ஜோசப் நவரத்தினம், அமரர் ஜேம்ஸ் குணரத்தினம் மற்றும் லியோ விஜயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரன், யேசுகுமார், அன்ரோனியா, யஜிந்தா, சரோஜினிதேவி, செல்விராணி, அமரர் யோகரத்தினம், கிறிஸ்ரீனா ஜெயமணி, பற்றீமாஜெயரூபி, நவமணிதேவி, அமரர் ஜெயராணி, பத்மநாதன், ரஞ்சினிதேவி, யசோதாதேவி, அமரர் நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரனும் அன்ரன் இராசநாயகம், பிலோமினா, றெஜினா சந்திரோதயம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (07.11.2025) வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து பூதவுடல் கரவெட்டி தேவமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.
021 226 5773, 077 625 8034
077 718 6426 (C-4262)
தகவல் : குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

வலம்புரியின் நீண்டகால
பத்திரிகை முகவர்



அமரர்
## நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம்
(செல்வண்ணா)

அவர்கள் கடந்த 03.11.2025
திங்கட்கிழமை அன்று
காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்தி பெற
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org